செ.வெ.எண் -23 நாள்:12.01.2018

# அரியலூர் மாவட்டத்தில் ஜல்லிக்கட்டு நடத்துவது தொடர்பான கடைபிடிக்க வேண்டிய விதிமுறைகள் குறித்து அலுவலர்கள் மற்றும் கிராம ஜல்லிக்கட்டு ஒருங்கிணைப்பாளர்களுடன் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.க.லட்சுமி பிரியா, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் கலந்தாய்வுக் கூட்டம் நடைபெற்றது.

அரியலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் மாவட்டத்தில் ஜல்லிக்கட்டு நடத்துவது தொடர்பாக கடைபிடிக்க வேண்டிய விதிமுறைகள் குறித்து அலுவலர்கள் மற்றும் மேலமைக்கேல்பட்டி, சிங்கராயபுரம், கோக்குடி, புதுச்சாவடி ஆகிய கிராமங்களின் ஜல்லிக்கட்டு விழா ஒருங்கிணைப்பாளர்களுடன் மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.க.லட்சுமி பிரியா, இ.ஆ.ப.,** அவர்கள் தலைமையில் கலந்தாய்வுக் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில், ஜல்லிக்கட்டு நடத்துவதற்கு எவ்வாறு அனுமதி பெற்று விண்ணப்பிக்க வேண்டும் என்று ஆலோசிக்கப்பட்டு, ஜல்லிக்கட்டு அனுமதி விண்ணப்ப படிவம் மற்றம் அரசு விதிமுறைகளின் விவரங்களை www.ariyalur.tn.nic.in என்ற இணையதளத்தில் பதிவிறக்கம் செய்தும், அல்லது மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் உள்ள மண்டல இணை இயக்குநர் (கால்நடைப்பராமரிப்புத்துறை), இரண்டாவது தளம் என்ற முகவரியில் நேரிலும் விண்ணப்பம் பெற்றுக்கொள்ளலாம் எனவும், முக்கியமாக அரசு அறிவித்துள்ளபடி, அனைத்து விதிமுறைகளையும் ஜல்லிக்கட்டு நடத்தும் கிராம ஒருங்கிணைப்பாளர், விழாக் குழுவினர்கள் கடைபிடித்திட மாவட்ட ஆட்சியர் அவர்கள் அறிவுறுத்தினார்கள்.

மேலும், ஜல்லிக்கட்டு நடத்துவதற்கு அனுமதி பெற அனைத்து விதிமுறைகளும் சரியாக பின்பற்றிட 15 நாட்களுக்கு முன்னதாக மாவட்ட ஆட்சியர் அவர்களிடம் விண்ணப்பிக்க வேண்டும் என ஜல்லிக்கட்டு ஒருங்கிணைப்பாளர் மற்றும் விழாக் குழுவினரிடம் மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.க.லட்சுமி பிரியா, இ.ஆ.ப.,** அவர்கள் தெரிவித்து கலந்தாய்வு மேற்கொண்டார்கள்.

இக்கூட்டத்தில், மண்டல இணை இயக்குநர் கால்நடைப்பராமரிப்புத்துறை மரு.எம்.நஸீர் மற்றும் அலுவலர்கள், மேலமைக்கேல்பட்டி, சிங்கராயபுரம், கோக்குடி, புதுச்சாவடி ஆகிய கிராமங்களின் ஜல்லிக்கட்டு விழா ஒருங்கிணைப்பாளர்கள் கலந்துகொண்டனர்.

செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.